**சிசி எண்.47/2010** **நாள்.20.06.2024**

**அசா.2 வாசு த/பெ. பக்கிரிசாமி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2008ம் ஆண்டில் தஞ்சாவூரில் மாவட்ட நீதிமன்றத்தில் Record Keeper ஆக பணி செய்தேன். நான் 2008ம் ஆண்டிலிருந்து 2010ம் ஆண்டு வரை Record Keeper ஆக வேலை செய்தேன். நான் நகல் பிரிவு கண்காணிப்பாளர் விடுமுறையில் சென்றபோது, நகல் பிரிவு கண்காணிப்பாளராக பொறுப்பில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 முதல் அசாஆ.9 வரையான ஆவணங்களில் எனது கையொப்பத்திற்கு கீழே In-charge என எந்த குறிப்பும் செய்யவில்லை என்றால் சரிதான். நகல் மனு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து நகல் கொடுக்கும் வரை உள்ள நடைமுறைகள் எனக்கு தெரியும். நகல் மனு தாக்கல் செய்த பிறகு அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் வழங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு நகலை ஒப்பிட்டு பார்ப்பதற்கு நகல் பரிசோதகருக்கு அதிகபட்சம் எத்தனை நாட்கள் தேவைப்படும் என்றால், 15 நாட்கள் தேவைப்படும். குறைந்தபட்சம் 3 நாட்கள் தேவைப்படும். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆனது 07.05.2008ல் Stamp Paper call-far செய்யப்பட்டு, அன்றே Deposit செய்யப்பட்டு, 07.05.2008 அன்றே delivered செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் அசாஆ.2 முதல் அசாஆ.9 வரையிலான ஆவணங்கள் 07.05.2008ல் Stamp Paper call-far செய்யப்பட்டு, அன்றே Deposit செய்யப்பட்டு, 07.05.2008 அன்றே delivered செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அசாஆ.1 முதல் அசாஆ.9 ஆவணங்கள் Emergent Cp ஆக வழங்கப்பட்டது. அவ்வாறு Emergent Cp ஆக வழங்கப்பட்டதற்கு குறிப்புகள் ஏதும் ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. A Register ஐ பார்த்தால் மேற்கண்ட ஆவணங்கள் எந்த வகையில் வழங்கப்பட்டது எனத்தெரியும். அசல் ஆவணங்களை ஒப்பிட்டு பார்க்காமல் அவசர கதியில் மேற்படி ஆவணங்களை வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/-எஸ். சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.